## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **ராமர்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**12.03.2026 OS. 57/2021 பி.வா.சா.1 ராமர்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விவரம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மாரிமுத்து என்பவரை ஊரில் மாரி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்ன ஆவணம் என்றால் தாலுகா அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட UDR ஆவணம் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள மேலே கண்ட பி.வா.சா.ஆ.6 UDR ஆவணத்தின் அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

2) மாரிமுத்து பெயரில் ஏற்பட்ட பட்டாவின் அசல் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். UDR ஆவணம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் UDR சர்வே காலத்தில் ராமகந்தனும் மாரிமுத்தும் அனுபவம் செய்து வந்ததால் அவர்களது பெயரில் UDR கால ஆவணம் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்தை ராமகந்தனும், மாரிமுத்தும் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல.

3) UDRல் மாரிமுத்து மற்றும் ராமகந்தன் பெயர் தவறுதலாக ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் எனது மாமியாரால் பெறப்பட்டது என்றால் சரியல்ல மருமகனாகிய நான் பவர் ஏஜென்ட் என்ற அடிப்படையில் வாங்கினேன். இந்த நம்பர் பிரதிவாதி நாகம்மாள் நல்ல உடல் நிலையில் தான் இருந்து வருகிறார்கள் என்றாலும் அவர் வெளி வேலைகளுக்கு எல்லாம் தானாக சென்று வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.12 15:13:38 +0530

4) எனது மாமியார் நல்ல உடல்நிலையில் இருந்து வருகிறார் என்றாலும் அவர் இவ்வழக்கில் ஆஜராகி சாட்சியம் அளித்தால் உண்மை விவரங்கள் தெரியவரும் என்பதனால் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 UDR காலத்து ஆவணம் உரிமை மூல ஆவணம் இல்லை என்றாலும் அதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றாலும் சரியல்ல.

5) வாதிகளின் தகப்பனார் ராமகந்தனும் மாரிமுத்துவும் உடன்பிறந்தவர்கள் அல்ல என்றாலும் தாவா புல எண். 57/1A வை மாரிமுத்துவும் ராமகந்தனும் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியின் மருமகன் என்ற அடிப்படையிலும் அவருக்கு பவர் ஏஜென்ட் என்ற அடிப்படையிலும் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.12 15:13:45 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam